அளவிற்கு, ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வீதம் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்குகிற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்மூலமாகவும் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 140 குடும்ப அட்டைகளுடன் தாய்க் கடையிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கடையினுடைய முக்கியத்துவம், அந்தப் பகுதி மக்களுடைய முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்குப் பரிசீலிக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 430, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

430—

வன உயிரியல் பூங்கா

__28550—திரு. சி. சண்முகவேலு:__

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணைப் பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணைப் பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்று சொன்னாலும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றால், கேட்க வேண்டாம். உட்காருங்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *ஒரு முக்கியமான விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதி இல்லை. உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 431, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

431—

புறவழிச் சாலை

***18918—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை–தேனி நெடுஞ்சாலையில் உசிலம்பட்டி நகரத்தில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS